# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2232/6 - 2021 ජුනි මස 14 වැනි සඳුදා - 2021.06.14

*2232/6 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*பிரிவு 5, 10, முதலாம் அட்டவணை மற்றும் மூன்றாம் அட்டவணையின் கீழ் அறிவித்தல்*

ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதியம், சகாயம், பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியம் அல்லது சேமிப்பு சங்கமொன்று தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் (ஊ) ஆம் பந்தி, 10 ஆம் பிரிவின் (1) உபபிரிவின் (ஆ) ஆம் பந்தியின் (V) ஆம் உபபந்தி, முதலாம் அட்டவணையின் 8 ஆம் பந்தி மற்றும் மூன்றாம் அட்டவணையின் (ஈ) ஆம் பந்தியின் (ii) ஆம் உபபந்தி என்பவற்றின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமாகிய ஹேரத் முதியன்சலாகே விஜய சந்திரதிலக பண்டார ஆகிய நான், இவ் அறிவித்தலின் ஊடாக, மேற்கூறப்பட்ட பிரிவுகள் மற்றும் அட்டவணைகளின் தேவைப்பாடுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய ஓய்வூதியம், சகாயம், பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியம் அல்லது சேமிப்பு சங்கம் தொடர்பில் ஏற்புடையதாக வேண்டிய பொது நிபந்தனைகளை இந்த அட்டவணையில் குறித்துரைக்கின்றேன்.

**அட்டவணை**

(1) ஏதேனும் கணக்கீட்டு வருடத்தில், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழிய சேமலாப நிதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழிய சேமலாப நிதியம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கை நிதியம் அடங்கலாக முடிவுறுத்தல் நன்மைகளுக்கு (ஏதேனும் ஓய்வூதியம், சேமலாபம், நம்பிக்கை, பணிக் கொடை அல்லது சேமிப்பு நிதியம் அல்லது சேமிப்பு சங்கம்) எவரேனும் தொழில் வழங்குநரினால் மேற்கொள்ளப்படும் மொத்த பங்களிப்பானது, அந்த வருடத்தின் தொழில் வழங்குநரனது மொத்த சம்பள உண்டியலின் 25% இனை விஞ்சுதல் ஆகாது.


1A - G 34417 — 25 (2021/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(2)* அத்தகைய ஏதேனும் நிதியங்களினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், குறிப்பிட்ட முதலீட்டுக்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அன்றி பின்வரும் எல்லைகளுடன் இணக்கப்பாட்டினை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) இந் நிதியங்களின் 40% இற்கு குறையாத பணமானது, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிராங்திய அபிவிருத்தி வங்கி அல்லது அரசாங்க பிணைகளில் முதலீடாக (முதலீடு வருடம் முழுவதும் காணப்படுதல் வேண்டும்) வைப்பின் மூலம் முதலீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மீதி ஏதும் இருப்பின் பின்வருமாறு முதலீடு செய்யப்படலாம்,

(அ) நிதியங்களின் 20% இற்கு மேற்படாத பணம், நிரல்படுத்தப்பட்ட தொகுதி கடன்கள் அல்லது ஏனைய நிரல்படுத்தப்பட்ட பங்குகளில் முதலீடு செய்யப்படலாம்.

(ஆ) மீதமுள்ள மீதி, ஏனைய வர்த்தக வங்கிகளில் முதலீடு செய்யப்படலாம்.

*(3)* இந்த அறிவித்தலில்- "மொத்த சம்பள உண்டியல்" என்பது முடிவுறுத்தல் நன்மைகளுக்கான நிதியங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளிலிருந்தான ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த நன்மைகள் எனப் பொருள்படும் என்பதுடன் அந்த வருடத்தின் இலாபங்களை அடைவதற்கு இலாப நட்ட கூற்றில் விதிக்கப்படத்தக்க முடிவுறுத்தல் நன்மைகள் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவு பங்களிப்பு அல்லது ஏற்பாட்டை உள்ளடக்கும்.

எவ்வாறாயினும், ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. என்பவை இந்த அட்டவணையின் 1 மற்றும் 2 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பொருட்படுத்தாது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அனைத்து தேவைப்பாடுகளுக்கும், ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியங்களாக கொள்ளப்படும்.

ஹேரத் முதியன்சலாகே விஜய சந்திரதிலக பண்டார,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02.

*06-283*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.